பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 03 சனிக்கிழமை (19-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 267

# தீர்வு யோசனைக்கு எதிராக கதிர்காமம் நோக்கிப் பேரணி

## குடாநாட்டை வட்டமிட்ட விமானம்

யாழ்ப்பாணம், ஒக. 19

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று ஸ்ரீலங்கா விமானம் ஒன்று அதி உயரத்தில் வட்டமிட்டுச் சென்றது. விமான இரைச்சலைக் கேட்ட போது சில இடங்களில் சந்தையில் கூடியிருந்த மக்கள் பதற்றம் அடைந்தனர்.

[இ-17 ...]

## தினேஷ் தலைமையில் பிக்குகள் இன்று அங்கு உண்ணாவிரதம்

கொழும்பு ஓகஸ்ட் 19

அரசாங்கத்தின் தீர்வு யோசனைக்கு எதிராக தலைநகர் கொழும்பில் நேற்று பௌத்த பிக்குகள் உட்பட நூற்றுக் கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து வாகனப் பேரணியாக கதிர்காமம் நோக்கிப் புறப்பட்டனர்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தலைமையில் அவர்கள் இன்று கதிர்காமத்தில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அலுவலகத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து பஸ்கள், கார்கள், மினி வான்கள் என்பவற்றில் வாகனப் பேரணியாக கதிர்காமம் நோக்கிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் திருமலைக்கு

கொழும்பு, ஒக. 19

விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் வடக்கிலிருந்து திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பாதுகாப்பு அதிகாரிகளை ஆதாரம் காட்டி 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவில் உள்ள செம்மலை கடற்புலிகளின் முகாமிலிருந்து விசைப் படகுகள் மூலம் இந்த ஆயுதங்கள் திருகோணமலையிலுள்ள இலங்காதுறை முகத்துவாரத்துக்கு கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து வண்டிகள் மூலம் விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கும் மூதூரில் உள்ள முட்டுவான் கிராமத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான எதிர்ப்பு ஆயுதங்களை இயக்கக் கூடிய விடுதலைப் புலி நிபுணர்கள் இருவர் திருகோணமலை வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-10]

## தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு மேலும் பலர் அன்பளிப்பு

வடமராட்சி, ஒக. 19

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு வடமராட்சிப் பகுதியில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் வைத்து மேலும் நான்கு பேர் ஒரு தொகைப் பணத்தை தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தியிடம் கையளித்தனர்.

1983 – 1988 காலப் பகுதியில் இலங்கை — இந்திய இராணுவத்தினால் முற்று முழுதாக சேதமாக்கப்பட்ட பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் கோவிலின் சார்பில் அதன் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. முருகுப்பிள்ளை தணிகாசலம் 25 ஆயிரம் ரூபாயையும் —

இன்பருட்டி சிக்கன கட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அநுராதபுரத்தில் பவள் வாகனம் மீது புலிகள் கிளைமோர் தாக்குதல்!

### பதினொரு சிப்பாய்கள் படுகாயம்!!

கொழும்பு, ஒக. 19

அனுராதபுரம் மாவட்டம் விலாச்சிப் பகுதியில் நேற்று அதிகாலை இராணுவ பவள் வாகனம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பதினொரு படையினர் படுகாயமடைந்தனர். இதேவேளை அப்பகுதியில் மிதி வெடிகளில் சிக்கி மேலும் 6 படையினர் காயமடைந்தனர்.

விலாச்சிப் பகுதியில் உள்ள ஐந்தாம் குளத்தடியில் அதிகாலை 5-50 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐந்தாவது கஜபாகு படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் சென்ற பவள் வாகனமே கண்ணியில் சிக்கியதாக நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

பவள் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டபின் படையினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வேலூர் சிறை உடைப்பு:

## நால்வர் யாழ்ப்பாணம் வந்துவிட்டனராம்!

சென்னை, ஒக. 19

வேலூர் சிறப்பு முகாமில் இருந்து தப்பியவர்களில் நான்கு பேர் யாழ்ப்பாணத்துக்கு சென்றடைந்து இருக்கக் கூடும் என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நான்கு விடுதலைப் புலிகளும் யாழ்ப்பாணம் சென்றிருக்கக் கூடிய வாய்ப்புக் குறித்து வவுனியாவுக்கு கிடைத்த தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பில் இருந்து வெளியாகும் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வேலூர் சிறப்பு முகாமிலிருந்து மொத்தம் 43 விடுதலைப் புலிகள் தப்பியதும் அவர்களில் 12 பேர் பிடிபட்டதும் தெரிந்ததையே.

பிடிபடாதவர்களிலேயே நால்வர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டதாக தற்போது தெரிவிக்கப்படுகிறது

## மட்டு. நகரில் சைக்கிளில் படையினர்

கொழும்பு, ஒக. 19

மட்டக்களப்பு நகரில் படையினர் தற்போது சைக்கிள்களில் ரோந்து செல்கின்றனர்.

இரவிலும். பகலிலும் ரோந்து நடவடிக்கைகளுக்கு அவர்கள் சைக்கிள்களையே பயன்படுத்துகின்றனர்.

(ஐ)

## பொலீஸ் நிலையங்கள் மீது கிழக்கில் புலிகள் தாக்குதல்

கொழும்பு, ஒக. 19

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே உள்ள மூன்று பொலீஸ் நிலையங்கள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இத்தாக்குதலில் இரு பொலீஸாரும் எட்டு படையினரும் காயமடைந்தனர்.

சத்துருக்கொண்டான், பள்ளியபாடு, புனாணை ஆகிய மூன்று பொலீஸ் நிலையங்களுமே ஒரே சமயத்தில் தாக்குதலுக்கு இலக்காகின.

தாக்குதல் நேற்றுக் காலைவரை நீடித்ததாகவும் மேலதிக படையினர் அப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-எ-3-6)

## கப்பல்கள் வடக்கே புறப்படுவதற்கு அரசின் அனுமதி இன்னும் இல்லை

### பொருள்களுடன் கொழும்பு துறைமுகத்தில் நிற்கின்றன

யாழ்ப்பாணம், ஒக. 19

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வடக்கே ஏற்றி வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும்பணியை மனிதாபிமான அடிப்படையில் மீண்டும் ஆரம்பிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இணக்கம் தெரிவித்துள்ள போதும் —

கொழும்பில் பொருள்கள் ஏற்றப் பட்ட நிலையில் வடக்கே வரத் தயாராக உள்ள இருகப்பல்களுக்கும் நேற்று மாலை வரை அரசு அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் அவசர தேவையைக் கருத்தில் கொண்டு, மனிதாபிமான

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரான்ஸில் நடந்த கார் விபத்து:

## பலியான 4 தமிழர்களில் இருவரின் பெயர் விவரம்

பாரிஸ், ஒக. 19

பிரான்ஸில் கடந்த திங்களன்று இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தில் பலியான நான்கு தமிழர்களில் இருவரின் பெயர்கள் தெரியவந்துள்ளன.

கொழும்புத்துறையைச் சேர்ந்த வெலிச்சோர் வாமதேவன், உடுவிலைச் சேர்ந்த கண்ணுசாமி குணோடியஸ்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி சுப்புலட்சுமி ஜெகநாதன்

தோற்றம்: 12-02-1936 மறைவு: 20-07-1995

அன்பான எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் அவரின் அன்பும், பண்பும் என்றும் எமது நெஞ்சத்தை விட்டகலா.

அவரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வகைகளில் எமக்கு உதவி செய்தவர்களுக்கும் 4-8-95 அன்று நடைபெற்ற அவரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

(38108)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 22 — 02 — 1946

இறைவன் திருவடியில்: 29 — 08 — 1994

திருமதி
### கனகசுந்தரம் விக்னேஸ்வரி


திதி: 19 - 08 - 1995

என்றென்றும் உன் நினைவால் வாடும்;

தகவல்:
செ. கனகசுந்தரம்,
446, நாவலர் வீதி,
நல்லூர். — குடும்பத்தினர்.

[38105]

## 31 ஆம் நினைவு நாள்



அமரர்
### தம்பிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

(இளைப்பாறிய இலங்கை காமிகேசன் சிமெந்து கூட்டுத்தாபனத் தவிசாளர் [சிறாப்பர்])

மலர்வு: 28 — 08 — 1928 உதிர்வு: [illegible]0 — 07 — 1995

திதி: 19 - 08 - 1995

அன்பின் உருவாய்
அறிவின் சுடராய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்

உங்கள் நீங்காத நினைவுகளை எம் வசம் தந்து விட்டு இறைவனடி சென்று விட்ட எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்,
மைத்துனிகள்.

70, சந்தோசம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (38101)

## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் 19 ஆம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டப முன்றிலில்—

மாலை 6 மணி— 7மணி வரை துளசி அரியரத்தினம் பாட்டு 7மணி — 8-30 மணி வரை திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி குழுவினரின் வயலினிசை

★ நல்லை ஆதீன கலாமண்டபத்தில்—

காலை 8-30 மணி— 12-30 மணிவரை திருமுறை வழிபாடும், பயிற்சிநெறி வகுப்புகளும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணன் உரை— ''திருவுருவ வழிபாடு — தத்துவம்'' பண்டிதர் மு. கந்தையா உரை— ''சைவ வாழ்வில் முப்பொருள் விளக்கம்''

★ நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில்—

பிற்பகல் 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப்பேருரை— ''திருமந்திரம்''

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயமண்டபத்தில்—

மாலை 5 - 30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் ''விஸ்ணு பாகவதம்'' தொடர் இசைப்பேருரையில்— 'ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்''

(எ-30-111)

## ஸ்கந்தா மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 19

ஸ்கந்தவரோதய கல்லூரியைச் சேர்ந்த ஆண்டு 11இல் கல்வி கற்கும் சகல மாணவர்களும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9-00மணிக்கு உடுவில் கல்விக்கோட்ட அலுவலகத்திற்கு சமுகம் தந்து முன்னோடி பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப் படுகின்றனர். [ஓ]

## கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 56 ஆவது ஆண்டு விழா

21 — 08 — 1995 திங்கட்கிழமை ஆச்சிரம ஆண்டு விழா தற்கால சூழ்நிலையின் பெறுபேறாகவும் ஆச்சிரமத்தில் இடம் பெயர்ந்தவர்கள் அதிகமாக இருப்பதாலும் இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட விழாவே கொண்டாடப்படும்.

21 - 08 - 95 காலை 7 மணிக்கு
பரிசுத்த நற்கருணை ஆராதனை நடைபெறும்.

அருளுரை:
அத்தியட்சகர் திரு. எஸ். ஜெபநேசன்
அவர்கள்

யாவரும் இவ்வாராதனையில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

வண. பிதா சாமுவேல் தே. அல்பிரட்
(சாம் அண்ணா)

[38104]

## சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்

(வ - து) சுன்னாகம்.

### அறிவித்தல்

1. உடுவில் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து, குறித்த செயலர் பிரிவிலுள்ள கிராமங்களில் வசிக்கும் 'கூ' உலர் உணவு அட்டையுடைய குடியிருப்பாளர்களும், வேறு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 'உ' உலர்உணவு அட்டை வைத்திருக்கும் குடியிருப்பாளர்களும் தங்கள் பங்கீட்டுப் பொருட்களை வசதியாகப் பெற்றுக் கொள்ள விரும்பும் கிளை விவரத்தை தெரிவிக்கும் முகமாக, எமது இணுவில் சந்தியிலிருக்கும் தலைமை நிலையத்தில் தங்கள் விண்ணப்பத்தை 31 - 08 - 95 க்கு முன்னர் ஒப்படைக்கவும்
2. உடுவில் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் பிரதேசசெயலர்/நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்தங்கியிருப்பவர்களுக்கானஒரு வார நிவாரணம் முறையே பழம் றோட், கோப்பாய் சந்தியில் உள்ள கிளையிலும், இணுவில் சந்தியில் இருக்கும் கிளை இல. 04 இலும் வைத்து வழங்கப்படுகின்றன. தங்கள் நிவாரணத்தை 25 - 08 -95 க்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.
3. நிவாரணப் புள்ளி 28 ஏ க்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன. கிளை இல. 1, 7 ல் ஏற்கனவே நிவாரணம் பெற்றவர்கள் உரும்பிராய் வடக்கில் இருக்கும் கிளை இல. 32ல் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

18 - 08 - 1995 (இ- 2077)


## உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவில் யாழ். மிட்ரவுண் றோட்டரக்ற் கழகம் நடத்தும்

# மாபெரும் கண்காட்சி

ஐந்து பெரும் பிரிவுகளாக

செப்ரெம்பர் 8 முதல் ஐந்து நாட்களுக்கு

★ காணற்கரிய மிருகங்களின் காட்சி
★ பல் வகைத் தாவரங்கள்
★ எங்கள் மகளிரின் கைவண்ணத்தில் மலர்ந்த அரிய கைவினைப் பொருள்கள்
★ கண்ணைக் கவரும் வண்ணக கோலங்கள்
★ மங்கையர் கைவண்ணத்தில் உருவான கேக் ஐசிங்

★ உடனுக்குடன் பரிசில்கள் தரும் உள்ளக விளையாட்டுக்கள்

இடம்:

★ யாழ். இந்து குமாரசாமி மண்டபம்
★ யாழ். மிட்ரவுண் றோட்டரக்ற் கழக மைதானம்.

[அன்பளிப்பு: ரூபா 10/- மட்டுமே]

வாருங்கள்! வந்து பாருங்கள்!! பயன் பெறுங்கள்!!!

இராணுவ நடவடிக்கையால்

# வலி. மேற்கு சீவல் தொழிலாளர்கள் வருமானம் முற்றிலும் இழந்து அவதி

யாழ்ப்பாணம், ஓக. 19

வலிகாமம் மேற்குப் பகுதியில் கடந்த மாதம் 9ஆம் திகதி முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இப்பகுதி சீவல் தொழிலாளர்கள் வருமானத்தை முற்றிலும் இழந்து அன்றாட வாழ்க்கைக்கே சிரமப்படுகிறார்கள் என அறியவருகின்றது.

இராணுவ நடவடிக்கைக் காலத்தில் பனைகள் நாலு ஐந்து நாள்களாக சீவப்படாமல் இருந்தபடியால் பனைகள் பழுதடைந்து விட்டன எனவும்—

ஆகவே இப் பனைகளில் கள் எடுப்பதற்கு அடுத்த ஆண்டு பருவகாலம் வரை காத்திருக்க வேண்டும் எனவும் சில சீவல் தொழிலாளர்கள் கவலையுடன் தெரிவித்தார்கள்.

இதனால் சுமார் 250 குடும்பங்கள் எந்தவித வருமானமும் இன்றி நிர்க்கதியான நிலைமையில் வாழ்கின்றனர்.

சீவல் தொழிலாளர்களின் இந்த நிலைமை பற்றி அவர்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனைப்படுத்தும் சங்கமான பண்டத்தரிப்பு தென்னை பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் வினவியபோது தெரிவிக்கப்பட்டதாவது:

வலிகாமம் மேற்கில் 1992ஆம் ஆண்டு சுமார் 750 அங்கத்தவர்களுடன் இயங்கிவந்த இச்சங்கம் அவ்வப்போது இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் பாதிக்கப்பட்டும், இடம்பெயர்ந்தும் தற்போது சுமார் 250 அங்கத்தவர்களுடன் இயங்கி வருகின்றது. அங்கத்தவர் ஒருவர் சராசரியாக ஒரு நாளைக்கு 30 போத்தல் கள் சங்கத்திற்கு வழங்கி 210 ரூபாவை வருமானமாகப் பெற்று வந்தார். தற்போது சீவல் தொழில் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் இந்த வருவாயை இவர்கள் முற்றாகவே இழந்துவிட்டனர். அவர்கள் மேலும் தொழிலைத் தொடர முடியாது நாளாந்த சீவியத்திற்கே வழியற்றிருக்கின்றனர்.

சங்கம் இத் தொழிலாளர்களுக்கு தலா ஆயிரம் ரூபாவை சம்பள முற்பணமாக வழங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (க-15)


திருமண வைபவங்களுக்கு ஏற்ப

கூறைச் சேலைகள், காஞ்சிபுரம், பனாரிஸ், தஞ்சூர், பட்டுவேட்டி சால்வைகள் அனைத்தும்

சகாய விலையில் பெற்றுக்கொள்ள கைராசியான ஸ்தாபனம்

பேரரசி வண்ணச் சோலை

(மகாராணி)

(சி/2073) யாழ்ப்பாணம்.


## விசேட அறிவித்தல்

கோப்பாய் பிரதேச சனசமூக நலனோன்பு மூலவள நிலையங்களின் வட்டக்குழுவின் நிதிக்காக இன்று (19 - 08 - 1995) நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டித ச. ச. நிலையத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப் படவிருந்த நிகழ்வை தவிர்க்க முடியாத காரணங்களினால் 23 - 10 - 1995 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

– நிர்வாகத்தினர்.

18-08-1995 (38092)

## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிக அல்வாய் மேற்கு, அல்வாயைச் சேர்ந்த திரு. சிவப்பிரகாசம் குமாருப்பிள்ளை என்பவர் 1994 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி காலஞ்சென்று விட்டார். அவருக்கு மனைவியோ, பிள்ளைகளோ இல்லை. அவருக்கு இலங்கை வங்கி (பருத்தித்துறை) கிளையில் சேமிப்பு கணக்கும் ஏனைய அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் இருப்பதனால் அவற்றில் உரித்தோ, சோந்தையோ இருப்பின் அவரின் உரித்தாளர், சாட்டுதற்காரர் மரண சாதனத்தத்துவகாரர் உரிமைத்தத்துவகாரர் எவரேனும் இருப்பின் இன்றிலிருந்து 14 நாட்கள் கழியு முன்னர் என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

1995 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17 ஆம் திகதி

செ. கணேசராசா
சட்டத்தரணி

தம்பசெட்டி,
பருத்தித்துறை. (38089)

## பனம் பழம் விழுந்து சிறுவன் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஓக. 19

பனம்பழம் எடுப்பதற்காக குனிந்த சிறுவன் மீது மற்றொரு பனம்பழம் வீழ்ந்த சம்பவம் கொடிகாமம் மந்துவிலில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த வீ. அகிலன் (வயது 12) என்னும் சிறுவனுக்கே இக்கதி ஏற்பட்டது. சிறுவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஒ-117)

வெளிநாடுகளில் வசிக்கும்

# ஈழத் தமிழர்கள் உறவினர் நிலை அறிவதற்கு ஆவல்

கடந்த மாதம் இடம் பெற்ற முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது வலிகாமம் மேற்கில் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களை கேள்விப்பட்ட வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் தமது உறவினர்கள் பற்றி அறிய ஆவலாக இருப்பதாக தெரிய வந்தது.

குடா நாட்டுக்கான தபால் சேவைகள் கடந்த நான்கு மாதங்களாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதையடுத்து—

வெளிநாட்டில் உள்ள வலி–மேற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் தமது உறவினர்கள் நிலையை அறிய ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியை நாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவா அலுவலகம் கொழும்பு அலுவலகம் ஊடாக யாழ். அலுவலகத்துக்கு அவர்களின் செய்திகளை அனுப்புவதாக தெரியவந்தது (ஒ-3)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்
மகளிர் படையணியில்
முதன்முதல் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
பெண் போராளி

2 ஆம் லெப் மாலதியின்

8 ஆம் ஆண்டு நினைவாக

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்
நடத்தும்

## இலக்கியப் போட்டி

கவிதை, சிறுகதை

### போட்டி விதிகள்

01. பெண்கள் மட்டுமே பங்கு பற்றலாம்.
02. தமிழீழப் பெண்களின் சமகாலப் பிரச்சினைகள் படைப்பின் கருப்பொருளாக கொள்ள வேண்டும்.
03. வயதுக் கட்டுப்பாடு இல்லை.
04. சிறுகதைகள் "புல்ஸ்காப்" தாளின் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் 45 வரிகளுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.
05. படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.
06. படைப்புகள் அடங்கிய கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவன இலக்கியப் போட்டி'' எனக் குறிப்பிட வேண்டும்.
07. படைப்பாளியின் பெயர், வயது, முகவரி என்பன தனியே ஒரு தாளில் எழுதப்பட்டு ஆக்கங்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
08. போட்டி முடிவுத் திகதி:- 30 - 09 - 1995
09. அனுப்ப வேண்டிய முகவரி:-

    தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்,
    இராச வீதி,
    கல்வியங்காடு, கோப்பாய்.
10. படைப்புகள் சொந்த முயற்சியில் உருவானவையாகவும் வேறெவற்றின் தழுவல் அல்லாததாகவும் அமைதல் வேண்டும்.
11. ஒருவர் ஒரு போட்டியில் மட்டுமே [கவிதை அல்லது சிறுகதை] பங்குபற்றலாம்.

★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டியில் வெற்றியீட்டும் முதல் 3 படைப்புகளுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

★ வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மாவட்ட ரீதியாக வழங்கப்படும்.

[38094]


சேரன் பல்பொருள் வாணிபம்

பருத்தித்துறை

02ஆம் ஆண்டில் காலடி வைக்கும் நாளில்

(19 - 08 - 1995)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உங்களுக்குப் பணி செய்ய உங்கள் ஆதரவையும் வாழ்த்துக்களையும் வேண்டுகின்றோம்.

★ மக்களின் மகிழ்ச்சி சேரனின் வளர்ச்சி ★

[சி-2069]

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைக்குரிய சோக்கேஸ் [10x8], ஓடுகள், குசன்செற்றி, பின்னல் செற்றி, ஓவன், ட்ரெஜிங்ரேபிள், சாப்பாட்டு மேசைகள், கதிரைகள் மற்றும் வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. குறிஞ்சி மருந்தகம் [அருகில்], பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி (38091)

கருங்காலி மயிர் கொண்ட கருணைகூடிய அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. க. பரராஜசேகரம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (விறகுசாலைக்கு அருகில்). (38090)

செங்கரும்பு மொத்தமாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வை. பேரம்பலம் ஆசிரியர், தலையாளி கொக்குவில். (38086)

10 அடி அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: காலை 9 மணி — 12 மணி வரை. கரன், ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் (திரு கல்வி நிலையத்திற்கு எதிர்). (38093)

### மலிவு விற்பனை

சமய நூல்கள், பக்தி இலக்கியங்கள், இலங்கை - இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் பாடசாலை உபகரணங்கள் யாவும் விற்பனையாகின்றன. ஸ்ரீ காந்தி புத்தகசாலை, நல்லூர். [38077]

இன்று மாலை இனிக்கோழிகள், சிக்கி, ஹங்கேரியன் பிறாமா, மணித்தாரா, வெள்ளடியன், வெலுவை வாத்து என்பன விற்பனைக்கு உண்டு N. ரமேஷ், C/o K. நித்தியானந்தன், (வட்டுக்கோட்டை வீதி), சித்தன்கேணி (சுப்பர்சோனிக் அடுத்த இடம்). (கடைசி விற்பனை) [38051]

### இனாம்

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் நல்லூர் கண்காட்சி சாலையிலுள்ள அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில் எமது உற்பத்திப் பொருட்களை 100/- ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்து ஒரு அழகிய முருகன் படத்தை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். [சி-2071]

### மிருதங்கம்

புதிய 22அங்குல பலா மிருதங்கம் 3000/- பரீட்சித்துப் பெற்றுக் கொள்ளலாம். K. விஜயகுமார், இல: 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். [38062]

### மணப்பெண்கள் தேவை

34 வயது, அமெரிக்கா M. S. C., 34 வயது A.G.A. மணமக்களுக்கு படித்த மணப்பெண்கள் உடனடியாக தேவை. எம்மிடம் சகல மதங்களிலும் மணமக்கள் உண்டு. துர்க்கா திருமண சேவை மகிலாகம், 178, பிறவுண் வீதிச் சந்தி. நாவலர் வீதி, (விலங்கு வேளாண்மை முன்பாக) யாழ்ப்பாணம். (38049)

32, 35 வயது டாக்டர்மாருக்கும், 33, 32 வயது பட்டதாரி ஆசிரியருக்கும், குற்றமுள்ள 35, 33 வயது டாக்டர்மாருக்கும், சைவ போசன 39, 30, 34 வயது உத்தியோகத்தர்களுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [38095]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புதிய பாடத்திட்டத்திற்கேற்ப புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 20-08-95 ஞாயிறு வெளியிடப்படும். ஆண்டு 3, 4 மாதிரி வினாத்தாள் 27-08-95 ஞாயிறு வெளியிடப்படும் மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், இல: 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [38099]

### மணப்பெண் தேவை

கௌரவமான குடும்பப் பெற்றோரின் மகன் படித்தவர், நல்ல வியாபாரம் செய்பவர் வயது 35, மிருகசீரிடம் (4), 8இல் செவ்வாய் நட்புப் பெற்றது. இரசபாவம் 19, உயரம் 5 அடி 6 அங். 30 வயதுக்கு உட்பட்ட A/L மேல் படித்த அழகிய பெண் தேவை. முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். இல. 825, C/o உதயன், யாழ்ப்பாணம். [38054]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 10 — 07 — 1910

உதிர்வு: 20 — 07 — 1995

## திருமதி பரிமளம் இராசரத்தினம்
(பரிமள அக்கா)

(ஓய்வு பெற்ற ஆசிரியை யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை)

பாரினில் அன்புடனும், பண்புடனும்
வலம் வந்த எனது அருமைத் துணைவியே!
எமக்கு வளமான வாழ்வளித்து
ஒளியூட்டி இதம் தந்த அன்னையே
மாதரசியே!
நீங்கள் மறைந்து இன்று
ஒரு திங்கள் ஆனதம்மா
மறக்க முடியவில்லையம்மா
உங்கள் திவ்ய முகம்
நீங்கள் மறைந்தாலும் உங்கள்
நினைவு எம்மை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"தேவிவாசம்"
உடுப்பிட்டி. (8638)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 12 — 1940

மறைவு: 29 — 08 — 1994

## அமரர் முருகேசு பூபாலசிங்கம்
(களபூமி - காரைநகர்)

### திதி: 19 - 08 - 1995

பண்பு என்னும் பசளையிட்டு
பாசமுடன் ஆளாக்கி
அன்பு எனும் நீர் ஊற்றி
ஆசையுடன் வளர்த்தெடுத்தீர்
வாழ்க்கையிலே நீர் எம்மை
உயர்த்திடவே வழிவகுத்தீர்
அவ்வழியில் நாம் நின்று உம்மை மறவோம்
இனிய எங்கள் அப்பாவே

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஈழத்துக் கதிர்தனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்.

132/2 பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம். (38085)

விண்ணக வாழ்வில்

## 31 ஆவது நினைவு தினம்



அன்னையின் மடியில்: 21 — 02 — 1936

ஆண்டவன் அடியில்: 20 — 07 — 1995

## தோமஸ் இம்மானுவேல்
(முன்னாள் C. W E. marketing Assistant)

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்"

"என்னுடைய ஜீவிய நாட்கள்
நிழலைப் போல் சாய்ந்தன"

இவருடைய ஆத்ம இளைப்பாற்றிக்கா இன்று (19 - 08 - 1995) சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

நீங்காத நினைவுகளுடன்;
தாய், சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள், சிறிய தந்தை, சிறிய தாய்,
பிள்ளைகள்.

வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [38080]

விண்ணக இன்பத்தின்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 15 — 08 — 1924

இறப்பு: 21 — 07 — 1995

## ஆசீர்வாதம் அம்புறோஸ்
(இராசா)

"விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுவதேயன்றி அழிக்கப்படுதில்லை"

அன்பு நிறைந்த எம் தலைவா! உம்மை நினைக்கையிலே-எம் உள்ளம் உருகுதைய்யா. மூன்று பத்து நாட்கள் ஆகினவே உங்கள் அன்புருவம் நாம் கண்டு, ஆறவில்லை அந்தக் காயம்-இனி அழுது இது தீராது. அரற்றி அது மாறாது. உமது ஆன்மா இறை இன்பத்தில் இணைந்திட இறைவனை இறைஞ்சுகின்றோம்.

எமது குடும்பத்தலைவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சுகவீனமடைந்து சிகிச்சை பெற்ற வேளைகளில் அவருக்கு வைத்திய உதவிகள் புரிந்த வைத்தியர்கள், தாதிமார்கள், பணியாளர்கள் அனைவருக்கும் இந்த வேளையில் நன்றி கூறுகின்றோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக கொடிகாமம் கச்சாய், புனித இராயப்பர் ஆலயத்தில் இன்று (19-08-95) சனிக்கிழமை மாலை 4. 30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதிற் கலந்து அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் படியும் மறுநாள் 20 ஆம் திகதி கச்சாய் வீதியிலுள்ள அன்னாரின் சகோதரன் இல்லத்தில் நடைபெறும் மதிய விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் படியும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புனித அந்தோனியார் வீதி,
கன்னாகம். (38081)

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## முடிந்த முடிவு

இனப்பிரச்சினை தீர்வின் வெளியாகின் மத்தியஸ்தத்தை ஏற்பதற்கு அரசாங்கம் தயார் இல்லை. இனி சமாதானப்பேச்சுக்கு இடமே இல்லை. யுத்தமே முடிந்த முடிவு.

இப்படி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் வியாழக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

அத்துடன் கொழும்பு மாவட்ட ''வெண்தாமரை'' இயக்க மாநாட்டில் கடந்த சனிக்கிழமை உரை நிகழ்த்துகையில் இன்னுமொரு விடயத்தையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடனான போரில் கடந்த அரசாங்கம் வெல்லமுடியாது போனதற்கு வெளிநாடுகளிடமிருந்து போதிய ஆயுதங்களை வாங்க முடியாமையே காரணம் என்றும்—

தற்போது சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்த படியால் வெளிநாடுகளிடமிருந்து போதிய ஆயுதங்களைப் பெறக்கூடியதாக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பீரிஸின் கூற்றிலிருந்து அரசாங்கத்தின் நோக்கங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்க்க அரசாங்கம் தயாரில்லை. தீர்வை வெளியாரின் மத்தியஸ்தத்துக்கு — அதாவது வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்தத்துக்கு விட்டால் தமிழர்களின் நியாயமான உரிமைகளைக் கொடுக்க வேண்டி வந்து விடும் என்று அரசு கருதுகிறது. அப்படிக் கொடுக்க மறுத்தால் சர்வதேச சமூகம் அரசின் போலி வேடத்தை அறிந்து விடும் என்றும் அரசு அஞ்சுகிறது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த போதே யுத்தத்துக்கான ஆயத்தங்களையும் அரசாங்கம் செய்து கொண்டிருந்ததை ஜனாதிபதி சந்திரிகா ஒப்புக் கொண்டிருந்தார்.

தற்போது அமைச்சர் பீரிஸ், அரசியல் தீர்வு யோசனைகளைக் கொண்டு வந்ததே வெளிநாடுகளிடமிருந்து ஆயுதங்களைப் பெறத்தான் என்ற தொனியில் பேசி உள்ளார். நெஞ்சில் உள்ளது தான் நாவில் வரும்.

தீர்வு யோசனைகளை சமர்பித்தது மூலம் வெளிநாடுகளிடமிருந்து ஓரளவு ஆயுதங்களைப்பெறுவதில் அரசாங்கம் வெற்றி கண்டுவிட்டது என்பதில் சந்தேகம் இல்லை.

ஆகவே தீர்வு யோசனையின் நோக்கத்தை அரசாங்கம் அடைந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

விடுதலைப் புலிகள் — அரசாங்கம் என்று இனி செய்திகள் அடிபடும் போது அது யுத்தம் பற்றிய செய்திகளாகவே இருக்கும். சமாதானம் பற்றிய செய்தியாக இருக்க மாட்டாது என்று அமைச்சர் பீரிஸ் கூறியதன் மூலம் அரசாங்கத்தின் கபடத்தனமும் உள்நோக்கமும் வெளியாகி விட்டன.

ஆகவே தமிழ் மக்கள் தீர்வு யோசனைகளில், இனியும் ஏமாறக்கூடாது விடுதலைப் புலிகளுடன் ஓரணியில் திரளுவது மூலமே அரசின் கபடத்தனத்துக்கு பதிலடி கொடுக்க முடியும்.

# வெளிநாடுகளில் உள்ளோரால் நலம் விசாரிக்கப்படுவோர் விவரம்

## சமூகம் தர செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 19

அண்மைய இராணுவ நடவடிக்கைகளை அடுத்து வெளிநாடுகளில் உள்ள பலர் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவினர்களின் நிலைமையை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக தங்கள் உறவினர்களின் நிலையை அறிய வெளிநாடுகளில் உள்ள பலர் முயற்சி எடுத்துள்ளனர்.

இவ்வாறு வெளிநாடுகளில் உள்ளவர்களால் நலம் விசாரிக்கப்பட்ட 71 பேரின் விவரங்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பணிமனைக்கு கிடைத்துள்ளன.

இவர்கள் 71 பேரையும் கோவில் வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தேடுதல் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட 71 பேரினதும் பெயர் விவரம் வருமாறு:-

அல்போன்ஸ் [பாத்திமா வீதி, பண்டத்தரிப்பு], எஸ். அருமைநாயகம் (ஆசிரியர்) (மூளாய் கிழக்கு), ஆறுப்பிள்ளை சிவராஜ் (பொன்னாலை), எஸ். அம்பலவாணர் (தொல்புரம்), அந்தோனிப்பிள்ளை பாலசிங்கம் [சில்லாலை), அருளப்பு அல்பிறட் (உயரப்புலம்], அரசரட்ணம் செல்லையா [நவாலி], அருளையா ரட்ணம் [சங்கானை), அல்போன்ஸ் சூசைப்பிள்ளை [பண்டத்தரிப்பு), ஏ. பாலையா மாவீரர்) (சுழிபுரம்),

பிரான்சிஸ் நிக்கலஸ் [வட்டுக்கோட்டை), குணரட்ணம் செல்வதுரை (சுழிபுரம் மேற்கு), ஜீவகாருண்யம் இராமையா [கண்ணகை அம்மன் கோவிலடி, வட்டு. மேற்கு), ஜெயராணி ராஜேந்திரா (மே/பா: சின்னையா தம்பு, மானிப்பாய் வடக்கு]

கமலினி பசுபதிரூபன் (சிவன் கோவிலடி வட்டு மேற்கு), கந்தசாமி ரவீந்திரன் (சங்குவேலி தெற்கு) கடம்பன் கணபதி (சுதுமலை வடக்கு), கார்மினி சொலமன் (கல்லூரி வீதி வட்டுக்கோட்டை)

கிருஷ்ணவேணி தங்கராஜா (மூளாய்), ஞலேந்திரசிலன் ரஞ்சினி (நவாலி தெற்கு), குழந்தைவேலு குடும்பம் (மகேசன் வீதி, நவாலி), குலராஜ் (வட்டு. மேற்கு), கார்த்திகேசு வரதராஜா (சித்தன்கேணி), கே. காந்தராசா (நவாலி வடக்கு), எஸ். பி. கந்தசாமி (ஆனைக்கோட்டை), மரியதாசன் (நவாலி தோவலயம் அருகில்) மனோன்மணி கந்தையா (வட்டு மேற்கு), நடராஜா குடும்பம் (கல்வளை],

நாகலிங்கம் அன் சன்னி துரையப்பா [சுழிபுரம், மேற்கு], நாகலிங்கம் குமார குருனானந்தன் [சங்குவேலி வடக்கு].

நேசமணி கந்தையா (வட்டு. மேற்கு), ஜே. பவளராணி [மறளாய் வீதி, சுழிபுரம்], புஸ்பலதா ராதாகிருஷ்ணன் (மூளாய் வீதி, வட்டுக்கோட்டை), லோகேஸ்வரி தேவராஜா [கலைநகர் சித்தன்கேணி], மோகனாம்பி மார்க்கண்டு [உடுவில் வீதி, சண்டிலிப்பாய்], மாணிக்கசிங்கம் புனிதமலர் (வட்டு. கிழக்கு].

முத்துக்குமாரு சிவபாதம் (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர் சித்தன்கேணி]. நவரட்ணம் தையல்நாயகி [கல்வியங்காடு], நாகமுத்து அப்பாக்குட்டி (தாவடி தெற்கு), நடராஜா ஜெயபாலசிங்கம் (புளியடி சந்தை வீதி, மானிப்பாய்), பங்கிரஸ் சூசைப்பிள்ளை [மானிப்பாய் தெற்கு].

பத்மஜெயம் கமலாம்பிகை (குமரன்புலம், மூளாய்), பசுபதி கஸ்தூரி [சிவன் கோவிலடி. வட்டு. கிழக்கு], ராணி யோகநாதன் [மே. பா: சிவதாஸன், மூளாய்], சங்கரப்பிள்ளை [நடராஜா வைத்தியர், காளுவன்], சீதா முருகசோதிராஜா [மயிலணி] எஸ். சற்குணநாதன் ''பிருந்தாவனம்'', மீசாலை தெற்கு]

கே. சிவலிங்கம் [கிராம சேவகர் – காரைநகர், நெல்லியான் வீதி, எஸ். சுப்பையா [பறாளாய் வீதி, சுழிபுரம்], சுப்பிரமணியம் சரஸ்வதி [புளியடிச்சந்தை லேன், மானிப்பாய்], சிவசுப்பிரமணியம் வேலுப்பிள்ளை [மகேசன் வீதி, நவாலி], சரஸ்வதி ரட்ணம் [அராலி வடக்கு], செல்லத்துரை அருளம்பலம் [''குகனகம்'' தாவடி], சின்னையா வேலாயுதம் [அராலி வடக்கு].

சின்னையா வயிரவநாதன் [உரும்பராய் மேற்கு), சிறிதரன் குடும்பம் [கலைநகர், சித்தன்கேணி), தயானந்தன் — பாபுஜி (வட்டு. மேற்கு), ஆர். தாமோதரம்பிள்ளை உடுப்பிட்டி), தம்பிப்பிள்ளை கந்தசாமி (இ.போ.ச. தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை), தியாகராஜா சமரட்ணம் (சங்கானை ப. நோ. கூ. ச.], தாமோதரம் பிள்ளை முத்துக்குமாரு(வட்டு மேற்கு)

தர்மானந்தன் இராஜையா (முருகமூர்த்தி கோவிலடி, உடுவில்; தம்பிமுத்து சிறிஹரன் (தொல்புரம் கிழக்கு), தம்பையா சிதம்பரநாதன் (நாகபுரி, வட்டு. தெற்கு], தம்பிராஜா கந்தையா (முருகமூர்த்தி லேன், சங்கானை), வன்னியசிங்கம் (மே/பா வி. துரைசிங்கம், [மயிலணி), வேலாயுதம் (கட்டுடை], வேதாயுதர் ரட்ணசபாபதி [வல்லை வீதி, சங்கானை), எஸ். வெங்கடாசலபதி [விக்ரோறியா கல்லூரி எதிரே, சுழிபுரம்)

விநாயகமூர்த்தி குடும்பம் (சுழிபுரம் மேற்கு], விமலா தம்பிநாயகம் [நவாலிதெற்கு] வ. யோகானந்தசிவம் (வேல்வாசம், வட்டு. மேற்கு]

{ஐ-3}

(முன்வந்த செய்தி 8 ஆம் பக்கத்தில்]

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் நள்ளிரவு வரை நடைபெறும்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை உறியடி உற்சவம் இடம்பெறும்.

(க)

★ ★ ★

யாழ். வண்ணை நீராவியடி கடையிற் சுவாமிகள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. எதிர்வரும் 29 ஆம் திகதி காலை சங்காபிஷேகமும், மாலை திருக்கல்யாணமும் இடம்பெறும்.

(ஓ)

## புலிகளின் குரல் வானொலியில்

19 – 08 – 1995

சனி இரவு

- ★ 8-02 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — 'உதைபந்தாட்டம்' பற்றி கலந்துரையாடுவோம்

20 – 08 – 1995

ஞாயிறு காலை

- ★ 7-02— மாவீரவணக்கம்
- ★ 7-15— களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 8-00 மணிவரை களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

19 - 08 - 1995

சனி மாலை

- ★ 5-00—சிந்தனைச்சிதறல்
- ★ 5-03 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 வேங்கை நெஞ்சம்
- ★ 5-30 அறிவியல் வினாடி வினா
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — என் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 பாமாலை

# இன்றும் நாளையும் பணம் பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஓக. 19

பின்வருவோருக்கான ஒரு கொகைப்பணம் தம்வசம் இருப்பதாகவும் —

சம்பந்தப்பட்டவர்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பலாலி வீதி, கந்தர்மடத்தில் உள்ள வருவாய் பகுதிச் செயலகத்துக்கு வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் —

நிதித்துறை நடுவப்பணியகம் அறிவித்துள்ளது.

அடையாள ஆவணங்களுடன் சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

திருமதி சீதா செல்லையா அல்லது வாசுகி செல்வராசா கலைநகர் அளவெட்டி தெற்கு, மா. நாகம்மா நிச்சாமம் சங்கானை கிழக்கு. எஸ். கந்தசாமி அருணாசலம் கனகசபை மே/பா முருகமூர்த்தி வீதி, சங்கானை, சி. சின்னத்தம்பி வடக்கம்பரை தொல்புரம், பூரணம் அல்லது ந. கமலா செல்வா வீதி தொல்புரம்.

சங்கரப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை பறாளாய் வீதி சுழிபுரம், அன்னலட்சுமி சந்திரலிங்கம் செல்லையா செல்லாச்சி மே/பா காளிகோவிலடி சண்டிலிப்பாய், என். சண்முகநாதன் அல்லது எஸ். சோதிமலர் நுணாசி வீதி, மாதகல் மேற்கு. த. பண்டாரநாதன் அல்லது பி. வைரவநாதன் கலைநகர் வீதி, சித்தன்கேணி. என். கந்தையா வட்டு. கிழக்கு சித்தன் கேணி.

மு. இரத்தினம் திருமதி கே. குலரத்தினம் மே / பா இல. 11, சங்கானை றோட் சங்கரத்தை, திருமதி சரஸ்வதி சந்திரகுலசேகரம் (ராணி) வீ. மகாதேவன் மே/பா வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை, திருமதி பத்மபாலசிங்கம் சோமாரன் தோட்டம் - உடுவில் கிழக்கு. திருமதி பு. சர்வானந்தம் சந்திரபோஸ் மே/பா Dr. சுப்பிரமணியம் றோட் சுன்னாகம், திருமதி ந. பவனவேல் மயிலங்காடு ஏழாலை தெற்கு.

## நாளைய கொடுப்பனவு

கந்தர்மடத்தில் அமைந்துள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் நாளை ஞாயிறு காலை 11-00 மணிக்கு மேலும் எட்டுப்பேருக்கு நிதித்துறை நடுவப் பணியகத்தினால் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

அந்த எட்டுப்பேர் விவரம் வருமாறு:-

திருமதி அம்பிகை சத்தியமூர்த்தி அல்லது ச. நடராசமூர்த்தி பண்ணாகம் தெற்கு, சுழிபுரம், திரு. பொன்னுச்சாமி நாகலிங்கம் அல்லது திருமகள் நாகலிங்கம் பண்ணாகம் தெற்கு, சுழிபுரம், திருமதி கனகபதி செல்வத்துரை பொன்னாலை மேற்கு, சுழிபுரம், திரு. சிவஞானசுந்தரம் பொன்னாலை மேற்கு, சுழிபுரம், புவனேஸ்வரி துரைராஜா தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், சரோஜினிதேவி சிவபாலச்சந்திரன் அல்லது திருமதி எஸ். தனபாலன் மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, நா. வயிரவநாதன் நாகம்மாள் கோவிலடி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, திருமதி புஸ்பரஞ்சினிதேவி நடராசா சாமுவேல் வளவு, களவியவத்தை, உடுவில் மேற்கு, உடுவில். (இ-ஓ-3]

## தமிழீழ பொதுக்கல்வி தேர்வு

1995 ஆம் ஆண்டுக்கான பொதுக் கல்வித் தேர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்றும் —

எழுத்துத் தேர்வு தொடர்பாக இம் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மதிப்பீடு பற்றியும் இவற்றின் பெறுபேறுகள் பற்றியும் கலந்துரையாடுவதற்கு சகல கோட்டக் கல்வி அதிகாரிகளும், ஐந்து தேர்வுக் கிளைகளினதும் பணிப்பாளர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோரும் நாளை 20 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் தேர்வு ஆணையாளரால் கோரப்பட்டுள்ளது.

(இ)

## "வேரும் விழுதுகளும்"
## கல்வியியற் கண்காட்சி

இடம்: நுணாவில் கண்ணகை அம்மன் கோயிலடி
காலம்: 15 - 08 - 95 — 25 - 08 - 95 வரை

பார்வையாளர்களுக்கான அனுமதியும் பின்னர் பாடசாலைகளுக்கான அனுமதியும் வழங்கப்படும்.

செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

(38039)


## வீரச்சாவு

### வீரவேங்கை
### தர்மராசா சிவாநந்தினி (பரணி)

வீரவேங்கை தர்மராசா சிவாநந்தினி (பரணி) கடந்த மணலாறு மோதலின்போது வீரச்சாவு அடைந்துவிட்டார். இவர் மூளாய் தர்மராசா தங்க மணி தம்பதிகளின் புத்திரியும், வசந்தாதேவி, சோதிலிங்கம், வனிதா, மேகலா ஆகியோரின் சகோதரியுமாவார்.

மூளாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (19 - 08 - 95) சனிக்கிழமை அஞ்சலி செலுத்தப்பெறுகின்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், மற்றும் நண்பர்களுக்கு வேதனையுடன் அறியத்தருகின்றேன்.

தகவல்:
தர்மராசா தங்கமணி
(தாய்)
(மாம்பழம்)

சித்தி விநாயகர்,
கோயில் அயல்,
மூளாய்.

(38109)

## கணபதிப்பிள்ளை வசந்தராணி
### [2 ஆம் லெப். பூங்கிளி]

காஞ்சிபுரம், மாதகலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வசந்தராணி 28-07-95 அன்று மணலாறுப் போரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பொன்னம்மா (கனடா) ஆகியோரின் பாசமிகு மகளும், செல்வராணி, பரமேஸ்வரி, மகாராணி, கந்தசாமி (கனடா], வயிரவநாதன் (கனடா), சுந்தரலிங்கம் [கனடா], சாந்தராணி [கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சேதுராசா, வைரவநாதி, கந்தசாமி, வசந்தகுமாரி [கனடா] ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் வித்துடல் கிடைக்கப் பெறாத காரணத்தால் இவரின் திருவுருவப் படம் மட்டுவில் தெற்கில் அமைந்துள்ள இவரின் வீட்டில் வைக்கப்பட்டு இன்று 19-8-95 மாலை 3 மணிக்கு பூரண அணிவகுப்பு மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவுக்கல் நாட்டப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

தகவல்:
நா. வ. கந்தசாமி
(மைத்துனர்)
மாதகல்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

(38106]

## மரண அறிவித்தல்

### திருமதி
### லில்லி ஞானரத்தினம் காராளசிங்கம்

தும்பளையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவருமான திருமதி லில்லி ஞானரத்தினம் காராளசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்கள் கொழும்பில் 15-08-95 இல் காலமானார்.

அன்னார் திரு. சி. காராளசிங்கத்தின் [Retd R. R. I., Kulalumpur) அன்பு மனைவியும், திருமதி அருந்தவராணி சுந்தரநாதன் (முன்னாள் மத்திய வங்கி ஊழியர்), திரு. லயனல் செல்வசிங்கம் (அவுஸ்திரேலியா), திருமதி பிறிம்றோஸ் செல்வராணி இராசரத்தினம் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 555A, காலி வீதி, கல்கிசையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் 17-08-95 அன்று கல்கிசை சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

தகவல்:
திரு. காராளசிங்கம்

(சி-2074)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இலங்கை வங்கி நண்பகல் 12 மணி வரை

யாழ். நகரில் உள்ள இலங்கை வங்கி கிளைகள் அனைத்தும் தற்போதைய சூழ் நிலையை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நண்பகல் 12 மணி வரையுமே வங்கி அலுவல்களுக்காகத் திறந்திருக்கும் என்று பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை வங்கி அலுவல்கள் 1.00 மணி வரையே நடைபெற்று வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## கேட்காமலே கிடைத்தது கூட்டணிக்குப் பாதுகாப்பு!

கொழும்பு, ஓக. 19

அரசாங்கத்துடன் இணைந்து அரசியல் தீர்வுத் திட்டத்தை தயாரித்தனர் என்பதால் புலிகளின் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கொழும்பிலுள்ள பணிமனைக்கும், கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடந்த வாரம் முதல் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருவதாக "திவயின" பத்திரிகை தெரிவிக்கிறது.

அரசின் தீர்வுத் திட்டம் கூட்டணியைச் சேர்ந்த நீலன் திருச்செல்வத்தினால் தயாரிக்கப்பட்டது எனவும் இக்காரணத்தினால் கூட்டணி அங்கத்தவர்களுக்கு புலிகள் தொலைபேசி மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனவும் இதையடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது என அப்பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது

இது தொடர்பாக கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரத்திடம் விசாரித்த போது, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதை உறுதி செய்ததுடன் தாம் பாதுகாப்பு வழங்குமாறு கோரவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

(ஓ-10)

## தீர்வு யோசனைக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புறப்பட்டனர்.

தினேஷ் குணவர்த்தனா தலைமையில் பௌத்த பிக்குகள் இன்று கதிர்காமத்தில் உண்ணாவிரதம் மற்றும் சத்தியாக்கிரக போராட்டங்களில் ஈடுபடவுள்ளனர்.

கதிர்காமம் கிரிவிகாரையின் முன்னால் இன்று காலை 7 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமாகும்.

கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கி நேற்று வாகன அணியில் புறப்பட்ட நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகளும் சிங்கள மக்களும் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

[ஐ-6]

## கப்பல்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கில் வடக்கே வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் தற்காலிக ஏற்பாடாக முடிவு செய்து ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் கடந்த புதன்கிழமை அறிவித்திருந்தனர்.

வடக்கே வர தயாரான நிலையில் கொழும்பில் உள்ள 'லங்கா கல்யாணி' 'மாஹோ' கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஏற்பாடுகளை செய்திருந்தது.

எனினும் பாதுகாப்பு அமைச்சு இதுவரை அனுமதி வழங்காத காரணத்தால் அக்கப்பல்கள் வடக்கே நோக்கி புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இது விடயம் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் நேற்று பேச்சுக்களை நடத்தினர்.

[இ-3)

## அனுராதபுரத்தில்...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றும்—

இச் சம்பவத்தில் காயமடைந்த சிப்பாய்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான பவள் கவச வாகனத்தில் தினமும் வீதிப் பரிசோதனைக்கு தாம் சென்று வருவதாகவும் அவ்வாறு தாம் சென்ற சமயமே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் காயமடைந்த சிப்பாய் ஒருவர் தெரிவித்தார். [ஐ-எ-3-6]

## துர்க்கை அம்மன் உற்சவம் இம்முறை நடைபெறாது

யாழ்ப்பாணம், ஓக. 19

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை இம்முறை நடத்துவதில்லை என்றும்—

உற்சவ காலத்தில் ஆலயத்தில் விசேட பூசைகளை நிறைவேற்றுவது என்றும் —

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான நிர்வாக சபை முடிவு செய்துள்ளது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமான இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் தொடர்ந்தும் பதற்றத்துடன் இருப்பதால் இந்த முடிவு எடுக்கப் பட்டதாகவும் —

தினமும் ஒரு நேரமாகப் பூசைகள் நிறைவேற்றப்படுவதாகவும் — தேவஸ்தான தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்ட அறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

தேவி அடியார்கள் பன்னிரு நாளும் தத்தமது இருப்பிடங்களில் இருந்தவாறே விரதமிருந்து அன்னையைப் பிரார்த்திக்குமாறும் —

தமது உபயப் பணத்தை ஆலய விலாசத்துக்கே அனுப்பி வைக்கலாம் என்றும் — அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழ.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னுதவி கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. செ. சூரியகுமார் 50 ஆயிரம் ரூபாயையும்—

கற்பிட்டிக் கடலில் மாவீரரான கடற்புலி லெப்டினன்ட் கேணல் நளாயினியின் தந்தையாரான முருகுப்பிள்ளை ஆறுமுகசாமியின் சார்பில் அவரது மகன் 50 ஆயிரம் ரூபாயையும்—

பிரபல சட்டத்தரணி செல்லத்தம்பி கணேசராசா 50 ஆயிரம் ரூபாயையும்— கையளித்தனர்.

பருத்தித்துறை தம்பசிட்டி பண்டாரி அம்மன்கோவிலடியில் திருமாறன் தலைமையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே இந்நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

ஏற்கனவே வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் குருவும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஒருலட்சத்து 10 ஆயிரம் ரூபாயை பரப்புரைக் கூட்டத்தில் வைத்து வழங்கியது குறிப்பிடத்தக்கது.

[இ-173]

## வங்கி நடவடிக்கை பாதிப்பு

யாழ், மாவட்டத்தில் நிலவும் முத்திரைத் தட்டுப்பாட்டால், தேசிய சேமிப்பு வங்கியின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வங்கியின் மாதாந்த வட்டிக் கொடுப்பனவுகளை தனிப்பட்ட வைப்பாளர்களுக்கு காசோலைகள் மூலம் அனுப்பும் நடவடிக்கையும் தற்போதைய நிலையில் மேற்கொள்ளப்பட முடியாதுள்ளது

இதனால் வங்கியில் வைப்புகளுக்கான வட்டியைப் பெறுவோர், நேரடியாக வந்து தமது கொடுப்பனவுகளைப் பெற்றுச் செல்லுமாறு வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் அறிவிக்கின்றார்.

## பலியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹரல்ட் ஆகிய இருவருமே அவர்களாவர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த முத்திரைச்சந்தையைச் சேர்ந்த நடராஜா பாஸ்கரன் உயிராபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் பிரான்ஸின் லூர்த்து நகரத்தில் உள்ள லூர்த்து மாதா விழாவில் கலந்து கொண்ட பின் காரில் திரும்பிக் கொண்டிருந்தவேளை பின்னால் வந்த கனரக வாகனம் ஒன்று காரை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பலியானவர்களில் மூவரின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன.

(ஐ)


## அன்பார்ந்த தமிழீழ மக்களே!

தமிழீழத்தின் தற்சார்பு பொருண்மியத்தை
நோக்கிய நகர்வின் ஒரு வெட்டுமுகத்தினை
தரிசித்திட
நல்லூருக்கு வாருங்கள்.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன
பொருண்மியக் கண்காட்சியை
தவறாது பாருங்கள்.

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

[சி/2064]